ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
சனவரி - பெப்ரவரி 2024
ஆண்டு 4 ▲ இதழ் 04
விலை : 200 / -

.

எட்டிநீ சென்ற போதும்
இறையடி அடைந்த போதும்
தொட்டுநீ வைத்துப் போன
தூவலும் கண்ணீ ரோடு
மட்டற எங்கள் நெஞ்சும்
மடியுதே என்ன செய்வோம்
தொட்டினி தமிழை செய்யத்
தொடர்பவர் உம்போல் யாரோ


**தமிழ்நெஞ்சம் அமின்**

**பேராசிரியர்**
**செ. யோகராசா**



2024

புத்தாண்டு வாழ்த்துகள்



# வாவா அன்பே...

சின்னக் கண்மணி
வண்ணப் பூங்கொடி
சிந்தை மயக்குகிறாய்...
என்னைக் கொஞ்சிடும்
ஏகக் கனவினில்
இட்டே முயக்குகிறாய்...

கண்ணால் சொல்லிய
காதல் வார்த்தையில்
நாணம் அடுக்குகிறாய்...
எண்ணா பொழுதினில்
ஏக்கப் பார்வையில்
இதயம் சொடுக்குகிறாய்...

கல்லாக் கலைகளை
கட்டில் விதிகளை
கணைபோல் புகுத்துகிறாய்...
அல்லில் என்மனம்
ஆசைப் படுகையில்
அனலில் நகர்த்துகிறாய்...

இன்றே துணைவர
இல்லில் இணைந்திட
ஏற்பைச் சொல்லிவிடு...
அன்றில் முழுவதும்
ஆயக் கலையுடன்
என்னை அள்ளிவிடு...

**தமிழ்நெஞ்சம் அமின்**


# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை
சனவரி - பெப்ரவரி 2024
ஆண்டு 4 ▲ இதழ் 04

பிரதம ஆசிரியர் : சித்தி வஃபீரா
editor & publisher : Sithy Wafeera

சிறப்பாசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்
Hon. editor : Tamilnenjam Amine

ஆசிரியர் குழு :

Dr ஜலீலா முஸம்மில்
கமர்ஜான் பீபீ
ஆர்.ஜே. பிரகலாதன்
நிலு டீன்
மின்னத் ஸறா பளூஸ்

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",
23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka

# ஆசிரியர் பக்கம்

அன்பான வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

புதியதொரு ஆண்டில் புத்தூக்கத்துடன் அடியெடுத்து வைத்திருக்கிறோம். பருவகால மாற்றங்கள் இயற்கையோடு இணைந்து ஒருபுறம் நடைபோட்டுக் கொண்டிருக்க, மறுபுறமோ மனிதநேயமற்ற ஒரு கூட்டத்தினால் இந்த சமூகத்தில் ஒரு சாராரோ, தனிமனிதனோ பாதிக்கப் பட்டுக் கொண்டிருப்பதும் அரங்கேறுவதைக் காணத் தான் முடிகிறது. பகுத்தறிவுள்ள மனிதராய் நாம் சிந்திக்கவும், நேர்ந்த தவறுகளிலிருந்து பாடம் கற்றுக் கொள்ளவும் முடியுமாயின், எதிர்காலத்தை சிறந்தமுறையில் வடிவமைக்க அவை ஏதுவாக அமையும்.

இந்தக் குறுகிய கால வாழ்க்கை பல பாடங்களைக் கற்றுத் தந்தும் கூட, அதிலிருந்து உரிய பயன்களை நாம் பெற்றுக் கொள்வதிலிருந்தும் பல சமயங்களில் தவறி விடுகிறோம்.நம் கவனக்குறைவாலும், சுயநலத்தாலும் சமூகத்தின் மீதான பார்வையையும் பொறுப்பையும் சற்று தளர்த்திக் கொள்கிறோமோ என்றெண்ணத் தோன்றுகிறது. நாம் வீட்டிலிருப்பினும், வெளியில் பயணப்பட்டிருப்பினும் எப்போதுமே விழிப்புணர்வுடன் இருந்தால் பல கசப்பான அனுபவங்களையும் துர்ச்சம்பவங்களையும் தவிர்க்கலாம்!

சமூகம் தவறான பாதையில் செல்லுமாயின், அதிலிருந்து மீட்டு, சரியான பாதையில் வழிநடத்தும் தார்மீகப் பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உள்ளது.

இதை புரிந்து கொண்டால், சமூகக் கட்டமைப்பு சீராக இருக்கும். இப்புதிய வருடத்தில் இதை மனதிற் கொண்டு பயணிப்போம். வருங்கால சந்ததியின் கையில் மாசில்லா ஒரு சமூகத்தைக் கையளிப்போம். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளுடன் பொங்கல் நல்வாழ்த்துகளும் உரித்தாகட்டும்!

– சித்தி வ.ஃபிரா
ஆசிரியர்



# பொங்கலோ பொங்கல்

தெரு வெல்லாம் புதுப்பானைகளும், புத்தாடைகளும், கரும்புக் கட்டுக்களும் எனத் தைத் திருநாள் களைகட்டத் தொடங்கியது. மழை ஒரு பக்கம் பதம் பார்த்து ஊரெல்லாம் நீர்க்காடாய் நிரம்பிக்கிடந்தன."தை பிறந்தால் வழி பிறக்கும்.'' என்பார்கள். அதன் யதார்த்தம் புரிகிறது.. எத்தனை அனர்த்தங்கள், இடர்கள், சுமைகள் ஏற்பட்டு 2023யைக் கழித்தாலும் மக்கள் புதுப் பொலிவுடன் இன்று உலாவிக் கொண்டிருக்கின்றனர்.

இத்தனை அமர்க்களங்கள் நடந்த போதும் இவை எதற்கும் சம்மந்தம் இல்லாதவள் போல் கனகா பலத்த யோசனையுடன் புளியமரத்தின் கீழ் அமர்ந்திருந்தாள். ''அம்மா அம்மா நாளைக்கு பொங்கல் என்று வகுப்பு பிள்ளைகள் கதைக்கிறாங்க... உடுப்பு எடுத்தவையாம், பொங்கல் செய்றவையாம் நமக்கு இல்லயாம்மா?'' கனகாவின் ஐந்து வயது நிரம்பிய மகள் மிதுவின் ஏக்கம் நிறைந்த குரல் கேட்டு நிமிர்கிறாள். கண்களில் நீர் பொல.. பொலவென தை மழையையும் தாண்டி பெருகியது.

பதறிப் போன மிது ஓடி வந்து தாயை அணைத்த படி ''அம்மா.. ஏம்மா அழறீங்க. நான் தப்பா ஏதாச்சும் சொல்லிட்டனா'' என்று கேட்க "இல்ல மக, நீ தான் தப்பான இடத்தில பிறந்திட்ட. கையாலாகாத நிலையில நான் நிற்கிறன். உனக்கு ஒரு சட்ட எடுக்கக் கூட முடியலயே!'' என மகளை இறுகிக் அணைத்துக் கொள்ள அவள் நெஞ்சும் இறுகிக் கனக்கின்றது.

கனகா ஒன்றும்வசதியில்லாதவள் இல்லை.வீடு, வளவு, வேளாண்மை, கார் என நல்ல வருமானம் பெற்று சிறப்பாக வைத்திருந்தான் கனகாவின் கணவன் ராஜன். எப்போதுமே தைப் பொங்கல் களைகட்டும். ஊருக்கே பொங்கல் வைப்பாள் கனகா.

சென்ற வருடம் நடந்த கார் விபத்தில் ராஜன் பரிதாபமாக உயிரை விட, கனகா ஒரு காலையும் இழந்தாள். சொத்து, சொந்தம் எல்லாம் மெல்ல மெல்லப் பறிபோக ஊனமுற்ற விதவையாய் சிறியதொரு காணி வீடென அடைபட்டு சிறிய சேனை செய்து பிழைத்துக் கொணடவளுக்கு அடைமழை கூட ஓரவஞ்சனை செய்து விட்டது. இதில் தைப்பொங்கல் எப்படி கொண்டாடுவது. அவள் மனமும், உடலும் சோர்ந்து போனது.

காலைக் கதிரவன் கிழக்கு வானில் தகதகத்தது. கனகா கடவுளிடம் தன் மகளிற்காய்பிரார்த்திக்கத்தொடங்கினாள்.

“ஐயா.. ஐயா..” குரல் கேட்டு வெளியே எட்டிப் பார்த்த கனகா. “என்னங்க யாருப்பா யாரு வேணும்”- நெற்றியைச் சுருக்கினாள், வந்து நின்ற இளைஞனை அறியாது.

“அம்மா என்னம்மா இது? ஐயா எங்கம்மா? என்ன தெரியலியா?.” வந்தவன் கேள்விகளை வியப்போடு அடுக்கினான்.கனகாவின் தயக்கத்தை உணர்ந்தவனாய் “அம்மா என்ன ஞாபகமில்லயா? நான் கணேஷ். ஐயாக்கிட்ட வேல கேட்டு வந்தப்போ என்ட றிசல்ட்ட பார்த்து ஸ்கூல்ல சேர்த்து A / L படிக்க வச்சவர்.” என்றான். முகமலர்ச்சியுடன் “ஆ… இப்ப எப்படி இருக்கீங்க தம்பி, ஐயா தவறிட்டாரு. இப்ப என்னால ஒரு உதவியும் செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கிறன் பா” என வருந்தினாள். “என்னம்மா சொல்றீங்க” கணேஷ் பதறிப்போனான்.

கனகாவின் அருகில் ஓடி வந்தான். அவன் கண்கள் பனித்தன. “அம்மா என்ன சொல்றீங்க” கனகா வின் கரங்கள் பற்றி அத்தனை விடயங்களையும் கேட்டவன்.. எது வும் புரியாத படி நின்ற மிதுவை அருகில் இழுத்து அரவணைத்தபடி அழுதான். தன்னை சுதாகரித்துக் கொண்ட கணேஷ் மிதுவை தூக்கி பைக்கில் ஏற்றியவன் கனகாவின் பதிலைக் கூட எதிர்பார்க்காது சிட்டாய் பறந்தான்.

‘‘அம்மா..இந்தாருங்க தைப்பொங்கலுக்கு தேவையான எல்லாம் இதுல இருக்கு உங்களுக்கு சேல... மிதுக்கு கவுன் இருக்கு சரியாக இருக்கான்னு பாருங்க அம்மா” அவன் படபட என சொல்லி முடித்தான். “ம் எதுக்கு இதெல்லாம் நாங்க எப்படியாவது வாழ்ந்திட்டுப் போறம்.’’ என விரக்தியுடன் பேசியவளின் அருகே வந்த கணேஷ் “அம்மா நீங்க எதையும் யோசித்து வேதனைப் படக்கூடாது. நான் சுனாமில குடும்பத்த இழந்து அனாதையா நிண்டப்ப நீங்களும் ஐயாவும் தான் என்னை அரவணச்சி ஆளாக்கினியள். நான் உங்கள இந்த நிலையில விடமாட்டன். உங்களுக்கு மூத்த பிள்ளயா இருப்பன்’’ அவன் குரலில் ஆயிரம் நம்பிக்கை வார்த்தைகள் அலைமோதின. கனகா மெல்ல எழ முயன்றாள். ஓடி வந்த கணேஷ் முதல்முறையாக. அவளுக்கு ஊன்றுகோலானான்.கணேஷின் கரங்களைப் பற்றி ஆனந்த கண்ணீர் வடித்தாள் கனகா.

பானையில் பால் பொங்கி வர கணேஷும், மிதுவும் கை தட்டி மகிழ அரிசியை கொட்டினாள் கனகா. பால் மட்டும் பொங்கவில்லை. அந்தக் குடும்பமும் பொங்கியது மகிழ்ச்சியில். தைப்பிறக்க அந்த வீட்டில் வழி பிறந்தது.

**றஹீமா இன்ஷார்**
**மீராவோடை.**



# பெற்றோர் அன்பு

ஆயிரம் வார்த்தைகளில் அடங்க
யாரையும் எழுதலாம் - ஆனால்
எனை எழுதியவர்களுக்கு
நான் என்ன எழுத? உறையாத
நீரோடையாய் ஊற்றென வருகிறதே
பெற்றோரின் அன்பு

உதிரம் தனை இழைத்து வலிகளை
விழிகளாக்கி பத்து மாதம்
கருவறையில் இருக்கையிலும், பல
வருடம் வாழ்வினிலும் பசித்திருந்து
வழித்திறந்த அழகிய அன்பு-
அவள் தான் அம்மா

புரியாத புத்தகமாய் புதிரான
அன்பாய் தலைமேல் தூக்கி வைத்து
அழகுபார்த்து தலைவி என முன்
நிறுத்தி வியர்வையை உரமாக்கும்
சிறந்த அன்பு -அவர்தான் அப்பா

தாயின் கருவளையமும் தகப்பனின்
தோள்களும் புனிதம் தான்
தாங்கி பிடிக்க அப்பா தூக்கி நிறுத்த
அம்மா வேறென்ன வேண்டும் இந்த
விஷமான உலகினிலே

வாழ்வின் பாதையில்
வளமுற வழி திறந்து
வர்ணனைகள் பல தந்து
விழி எனக் கோர்த்து
வசந்த சாலைகளாய்
வளமூட்டி வளர்த்தெடுக்கும்
அன்பு - பெற்றோர்

கானல் நீரோடை அவர்கள்
கண்களில் சுறந்த போதும்
காட்சிகளை மறைத்து
முத்தாய் முகம் அமைத்து
பொக்கிஷமாய் போர்த்தும்
பேரன்பு இது

காலங்கள் கடந்தும்
கவலைகள் கரை சேர்ந்தும்
விதிகள் தடம் புரண்டும்
விழியென தேடி வரும் அன்பு-
பெற்றோர்
வர்ணனைகள் இல்லை அதற்கு
வாக்கியங்கள் எல்லையில்லை

தம் உயிர்முழுக்க வதைத்து
அன்பும் அரவணைப்புமாய் வளர்த்து
தியாகங்களே சுமந்து எமை வளர்க்க-
தீச்சுவரிலும் தலை சாய்ப்பார்கள்
பெற்றோரின் அன்பு என்றாலே
மற்றதெல்லாம் வேறு எதற்கு

**நீனத் நாசிக்,**
**நிந்தவூர்**

**வாழ்க்கைக்கு நிம்மதி தரும் மந்திரங்கள்**

- உங்களை யாரேனும் கோபப்படுத்தும் போது மௌனமாக இருங்கள்!
- விலக்கி வைக்கும் போது சற்று விலகியே இருங்கள்!
- உதாசீனப் படுத்தும்போது உடைந்து விடாதிருங்கள்!
- காயப்படுத்தும் போது கண்டும் காணாமல் இருங்கள்!

# நீயும் ஓர் அதிசயம் தான்

பளுதூக்கும் வீராங்கனையாக
எளிதாகப் பாவனை செய்து நீயும்
சுமக்க முடியாத
சுமைகள் அத்தனையும்
புன்னகைத்த வண்ணம்
அடுத்தவரின் துணையின்றி
அன்றாடப் பொழுதுகளில்
அற்புதமாய்ச் சுமக்கிறாய்
அதிசயித்துப் போகிறேன்.

சக்கரம் பூட்டிய இயந்திரமாய்
சதாவும் சுழல்கின்றாய்
குடும்ப பொறுப்புக்களை
விருப்போடு தலைமேலேற்கிறாய்
அலுவலகப் பணியென்று
அன்றாடம் இயங்குகிறாய்
ஆளுமையின் அடையாளமாய்
அவ்விடங்களில் தோன்றுகிறாய்
ஆனந்தம் கொள்கிறேன்

உறவுகளை பேணுகின்றாய்
உன்னதமாய் வாழ்கின்றாய்
உதிரியான அலுவல்களை
உடனுக்குடன் முடிக்கின்றாய்.
பானை பிடிக்கின்றாய்
பேனையும் பிடிக்கின்றாய்
பாத்திரங்கள் பலவுமேற்று
பாவை நீ உழைக்கின்றாய
பெருமிதம் கொள்கிறேன்

விரலாலும் குரலாலும்
வித்தைகள் காட்டுகின்றாய்
விந்தை செயல்களினால
வியப்பையே தருகின்றாய்
தென்றலாய் இதமாகி தேன்
இனிமை தருகின்றாய்
அதீத கருமங்களை
ஆனந்தமாய் ஆற்றுகின்றாய்
அதிசயித்துப் போகின்றேன்

பாத்திரங்கள் பலவுமேற்று
பாரிலே உலவுகிறாய்
நேத்திரங்கள் துயிலாது
நின்கடமைகள் முடிக்கின்றாய்
சாத்திரங்கள் பாராது
சரித்திரங்கள் படைக்கிறாய்
ஓய்வின்றி இயங்குகிறாய்
நீயுமோர் அதிசயம் தான்
நெஞ்சுக்குள் வியக்கின்றேன்

**ஹாஜறா கலீலூர் ரஹ்மான்**
காத்தான்குடி.

- இளநீரை வெட்டி அதற்குள் ஒரு தே.க சீரகம்,ஒரு தே.க நாட்டுச்சர்க்கரை, ஒரு தே.க. பாசிப்பருப்பு போட்டு மூடி மாலையில் வைக்க வேண்டும். மறுநாள் காலையில் இளநீரை வடிகட்டி பருக வேண்டும். தொடர்ந்து இதை ஒரு வாரம் செய்து வந்தால், எப்பேர்ப்பட்ட சிறுநீரகக் கற்களும் சிறுநீர் வழியாக வெளியேறி விடும்

# படித்ததிலே பிடித்தது



ஒரு தந்தை தனது இறுதிக் காலத்தில் மகனை அழைத்து சொன்னார்,

மகனே! இது உனது பூட்டனின் கைக்கடிகாரம், 200 வருடங்கள் பழைமை வாய்ந்தது, நான் இதனை உனக்கு தருவதற்கு முன்னால் நீ கடைவீதிக்கு சென்று கைக்கடிகார கடையில், நான் இதனை விற்கப் போகிறேன். எவ்வளவு விலை மதிப்பீர்கள் என்று கேட்டுப்பார் என்றார்.

அவன் போய் கேட்டு விட்டு, தந்தையிடம், இது பழையது என்பதால் 5 டாலர்கள் மாத்திரமே தரமுடியும் என்றனர்.

தந்தை பழைய பொருட்கள் விற்கும் Antique கடைக்குப் போய் கேட்டுப் பார் என்றார். அவன் போய் கேட்டு விட்டு, தந்தையிடம், இதற்கு 5000 டாலர் தரமுடியும் என்றனர்,

தந்தை இதனை நூதனசாலைக்கு (museum) கொண்டு சென்று விலையை கேட்டுப் பார் என்றார்.

அவன் போய் கேட்டு விட்டு தந்தையிடம், நான் அங்கு போன போது, அவர்கள் அதனை பரிசோதனைக்குற்படுத்த ஒருவரை வரவழைத்து பரிசோதித்துவிட்டு, என்னிடம் இதற்கான பெறுமதி ஒரு மில்லியன் டாலர் என்றனர்.

தந்தை, மகனைப் பார்த்து மகனே! சரியான இடமே உனது அந்தஸ்தை சரியாக மதிப்பிடும் எனவே பிழையான இடத்தில் நீ உன்னை நிறுத்திவிட்டு உன்னை மதிக்கவில்லை என்று நீ கோபப்படுவதில் அர்த்தம் இல்லை என்றார்.

உனது அந்தஸ்தை அறிந்தவனே உன்னை கண்ணியப்படுத்துவான் உனக்கு தகுதி இல்லாத இடத்தில் நீ இருக்காதே இதனை வாழ்க்கையின் பாடமாக எடுத்துக்கொள் என்றார்.

**பிரசாந்த்**
*மஸ்கெலியா*

# அன்பு



அம்பால் வீழ்த்தியவர்களை விடவும்
அன்பால் வீழ்ந்தவர்களே அதிகம்
கண்ணீரும் காத்திருப்பும்
காலம் முழுவதும்
எதிர்பார்த்திருப்பும் ஏமாற்றங்களும்
காலத்தின் விளிம்புகளிலே

காலம் எப்போதும் மாறாது
அது நம்மைத்தான் மாற்றும்
மாற்றம் ஒன்றே மாறாதது
மாற்றங்களை தேடும் மனமே அன்பை
அன்பால் வெல்லும் எவ்வன்பும்
புத்தம் புது காவியமே அது பொக்கிஷமே

தொலைத்ததை தேடலாம் - ஆனால்
தொலைந்ததை தேடுவதில்
எவ்விதமான அர்த்தமும் இல்லை
வாழ்க்கை சில நேரங்களில்
பலருக்கு கண்மூடிவித்தையே

இருப்பதை தொலைப்போம்
இல்லாததைத் தேடுகிறோம்
கண் முன்னால் காட்டப்படும்
அன்பு மறுக்கப்பட்டு பின்பு
பெறுமதி இழக்கப்பட்டு சில சமயம்
கைவிடப்பட்டு போவதைக்
காண்கின்றோம்

காலப்போக்கில் இவ் இதயங்கள்
கல்லாக்கி கண்ணீரை ஊற்றாக்கி
மண்ணுக்கு உரம் சேர்த்து விடுமே
கல்லறைக்குள் சென்றிடுமே
தொலைந்த அன்பை தேடாதே - நீ
தொலைத்த அன்பை விட்டுக்கொடுக்காதே

போராடு உணர்வோடு என்றுமே
உயிரோடு உறவாடு மகிழ்வோடு.

**பாத்திமா றிப்கா**
மீராநகர்

---

உன்மொழியால் காதல் உரக்கச்சொல்; செந்தமிழாம்
என்மொழியால் நானும் இயம்புகிறேன் - இன்மழலை
பேர்மொழிய பெற்றெடுத்து பேசவிட்டுப்
பார்த்திடுவோம் யார்மொழியில் பேசுகிற(து) என்று.
.

ஏடி வரதராசன்

# தமிழ் எங்கள் உயிர் மூச்சு

செந்தமிழ் பாடலாய்
செவிதனைக் குளிர்வித்தாய்

நற்றமிழால் நவின்று
நலம் பயத்தாய்

முத்தமிழே மூதுரை
தந்த பைந்தமிழே

முச்சங்கம் எடுத்தியம்பிய
முன்தமிழ் நீதானே

இலக்கணம் உன்னிலுண்டு
இலக்கியமும் பலவுண்டு

காப்பியங்களைத் தந்திட்ட
பழந்தமிழ் காவியமே

நெஞ்சில் மறைந்திடாத
ஓவியம் ஆனாயே

இதழ்களால் செப்பினால்
இதயம் மகிழ்கிறதே

பாவலனும் உருவானான்
பாங்காய் எடுத்துரைத்தான்

புலவனும் போற்றினான்
புத்துணர்வு அடைந்தானே

கவிதையாவும் உன்னாட்சியே
கம்பனும் சாட்சியே

இராமாயணம் மகாபாரதம்
அறிந்திட வைத்தாயே

வண்டமிழாய் வந்தாயே
வந்தோரை வாழ்த்திடவே

அழகுத்தமிழால் அனைவர்
நெஞ்சையும் கவர்ந்திட்டாயே

எப்படி புகழ்ந்தாலும்
நீதான் உயர்ந்தமொழி

தமிழ் பேசும் உள்ளத்தில்
உணர்வாய் கலந்திட்டாயே

வாழ்க நீ எந்நாளும்
வணங்குகிறேன் தலை சாய்த்தே!

**பெ.வெங்கட லட்சுமி காந்தன்**
விருதுநகர்

## நகைச்சுவை

ஒரு பொதுக்கிணற்றில் பலர் குளித்துக் கொண்டிருக்க, ஒருவர் அவசரமாக ஓடி வந்து எதையோ தேடிக் கொண்டிருக்கிறார். குளிப்பவர்களில் ஒருவர் : "என்ன ப்ரதர் தேடுறீங்க?"

மற்றவர் : "கொஞ்சநேரம் முன்பு குளிக்க வந்தேன். கைக்கடிகாரத்தைக் கழட்டி வச்சு எடுக்க மறந்துட்டேன். அதைத் தான் தேடுறேன். அதற்கு மற்றவர் "உங்க கைகடிகாரம் நல்லா ஓடுமா" என்று கேட்க, இவர் சொல்கிறார் "ஆமாங்க, நல்லாவே ஓடும்". அதற்கு மற்றவர் : "அப்ப எதுக்கு இங்கே தேடுறீங்க, இந்நேரம் அது ஊர் எல்லையவே தாண்டியிருக்கும்.ஓடிப் போயி பிடிங்க!"

# இனிக்கும் இல்லறம்

**நிலு டீன்**
பண்டாரவளை

வாலிபங்களோடும் வயதாக கூடும் ஆனாலும் அன்பு மாறாதது மாலையிடும் சொந்தம் முடிப்போட்ட பந்தம் பிரிவென்னும் சொல்லே அறியாதது... என வாலியின் வரிகளினாலேயே ஆரம்பிக்கின்றேன் வாழ்வின் மூன்றாம் ஏட்டில் தொடங்கி வாழ்க்கை முழுதும் தொடரும் இனிதான இல்லறம் தொடர்பில் நானும் கொஞ்சம் பேசலாமென விழைகிறேன்.

வாழையடி வாழையாய் வாழ்க்கை தழைக்க எனவும், வம்சம் நிலைக்கவெனவும் கெட்டி மேளங்கள் கொட்டி, வேத மந்திரங்கள் ஓதி ஏதோ ஒரு முறையில் ஆயிரம் காலத்து பயிரென சொல்லும் திருமணங்கள் தினம் தோறும் நடைபெறுகின்றன ஆனால் அதில் எத்தனை வாழ்வு தான் நிலைபெறுகின்றன என்றால் அது கேள்விக்குறியே!

இரு மனங்கள் இணைந்து ஒரு மனமாகும் திருமணம் தினம் தினம் இனிக்க வேண்டும் எனில் அதற்கென சில சூட்சுமங்கள் உண்டு. இளவயதில் வாழும். இனிமையான வாழ்க்கை தான் கிழப்பருவம் எய்திய போதும். மாறா அன்பை பெற வழிவகுக்கும். அந்த காலத்தில் உறவுகள் உன்னதம் புரியாது. மனம் போன வழியில் நாட்டம் போகுமெனில் சுக வாழ்வு பாழடைந்து நஷ்டம் காண்பீர்கள் கவனம்.

ஊடல்கள் இன்றி காதல்கள் இல்லை ஆனாலும் ஊடல் மட்டும் நிலைபெறின் அங்கு காதலே இல்லை சின்ன சின்ன சண்டைகள் வாழ்க்கையை அழகாக்குகின்றன. அது போல் விட்டுக் கொடுத்தல்களின் போதே உறவும் நிலைபெறும் இது இல்லறத்தின் இலக்கணம்.

ஒரு கணவன் சினம் கொள்கையில் மனைவி பொறுமை காக்க வேண்டும் மறுதலையாய் மனைவி துவண்ட பொழுதுகளில் கணவன் தோள் கொடுக்க வேண்டும். விட்டுக் கொடுத்தலும் புரிந்துணர்வும் கொண்ட இல்லறம் இன்றும் என்றும் நல்லறமே.

கணவன் வேலை விட்டு வரும் வேளையில் மனைவியின் மலர்ந்த முகத்தில் ஆரம்பிக்கிறது கணவனின் மகிழ்ச்சி.

வரும் வேளையில் குறை கூறி மனை நிரப்பாதீர் எந்த வேலைகளின் மத்தியிலும் நமக்கானவர்களுக்கான நேரம் ஒதுக்கி

# அம்மா

துணிச்சலுக்குப் பெயர் போனவள்
தான் அம்மா.
உபகரணங்கள் உதவியுடன்
ஊசலாடும் உயிர்.

செயற்கை சுவாச உறையை
எடுக்கச் சொல்லி
இரவுக்குள் இறந்து விடுவேன்
வீட்டுக்குப் போகலாம்.

நிறைய பேர் வருவார்கள்.
நாளை என்னைக் கிடத்தப் போகும்
கூடத்தை தயார் செய்து
வைத்துவிடுங்கள் என்கிறாள்.

எதுவாக இருந்தாலும்
எதிர் கொள்ளும் அம்மா
மரணத்தையும் ஒரு கை
பார்த்து விடக் காத்திருக்கிறாள்

அ.ஃஷித் ரேணா
புதுக்கோட்டை-6

கதைக்க பழகிக் கொள்ளுங்கள். அந்த பொழுதிலும் கணவன் குடும்ப குறைகளை மனைவியோ மனைவி யின் குடும்ப குறைகளை கணவனோ கூறும் சம்பாசணைகளை இயன்ற வரை தவிர்த்தல் இனிமையானது.

இளமைகால அனுபவங் களையும் எதிர்காலம் மீதான எதிர்பார்ப்புகளையும் கடக்க இருக்கும் வாழ்க்கை தண்ட வாளத்தை இருவரும் கை கோர்த்து கடப்போம் எனும் உணர்வுடனான உரையாடல்கள் என்றும் இனிதே.

25 இன் ஆரம்பத்தில் இங்கு இனிதே ஆரம்பிக்கும் இல்லறங்கள் 35 ஆகையில் கசந்து விடுகின்றன. இன்னொருவர் மீதான நாட்டம் வருகிறது இதற்கு பொதுவாகவே இரு பாலாருமே காரணமாய் அமையக்கூடும் பெண் என்பவள் பிள்ளையின் படிப்பு எதிர்காலம் என்ற சிந்தனையில் கணவனை. கரிசனை பண்ணாமையும், ஆண் என்பவன் பொருளாதாரத்தில் நிலைபெற எண்ணி மனையாளை மறந்து போவதும் தர்மம் ஆகாது. பெரும்பாலான பிரிவுகளுக்கான காரணமாய் அமைவது இந்த காலப்பொழுதினில் இடம்பெறும் ஒருவித பிரிவு நிலையிலே சேர்ந்து இருப்பது மட்டும் காதலாகாது புரிந்துணர்வுடனும் பரிவுடன் ஒருவர் நிலையில் இருந்து மற்றவர் யோசிக்கும் தன்மையுடன் கூடிய காதலே நிலை பெறும்.

திருமணத்திற்கு பின்னரும்

காதலியுங்கள் அந்த காதலை துணைக்கும் உணர்த்துங்கள்.

விலகல்களையும் விரிசல்களையும் தவிர்க்கலாம்.

ஒருவருக்கொருவர் பாசம் தருவது எவ்வளவு முக்கியமோ அதே அளவு நம்பிக்கை கொள்வதும் முக்கியமாகும் சந்தேகம் என்பது வந்தால் எந்த இல்லறமும் இனிக்காது எனவே கணவன் மனைவி மீதும் மனைவி கணவன் மீதும் நம்பிக்கை கொண்டு பயணித்தல் நன்று. வந்து வந்து போகும் உறவுகளில் வாழ்நாள் முழுவதும் வரும் ஒரு உறவுக்காக நாம் எதை வேண்டுமானாலும் செய்யலாம் அவள் அப்படித்தான் என்று கணவனும் அவர் அப்படித்தான் என்று மனைவியும் ஒருவருக்கொருவர் புரிந்தும் தெரிந்தும் தெளிந்தும் வாழ்வதுதான் வாழ்க்கை.

வளையாமல் நதிகள் இல்லை.

வலிக்காமல் வாழ்க்கையில்லை.

உளி தந்த வலி கண்ட கல்தான் உயர்ந்த இடங்களில் தரிசிக்க வைக்கப்படும் சிலையாகும்.

வலிகடந்தும் வாழப்பழகுவோம் அதுவே அறமும் ஆகும்.

இறுகப்பற்று - இல்லறம் வெற்றி.

# முக மூடிகள்

அன்பால் அவளை ஈர்த்தாய்
ஆசை வார்த்தைகளைக் கோர்த்தாய்
காதல் பார்வைகளை எறிந்தாய்
அவள் நேசத்தைப் பறித்தாய்

விடை பெறும் வரையுமே
அவளுடனிருப்பவனாய்
அவளுக்கென் றானவனாய்
நீயிருந்தாய் அன்று

விடைபெற்று மறைந்தது
மட்டுமல்லாமல் மறந்தும் விட்டாயே
அவளால் உன்னைப் போல் இலகுவில்
மறந்திட முடியுமா

உன் ஆசை வார்த்தைகளில் சிக்கி
போலி வேஷத்தில் திக்கியவள்
இன்று வரை ஓர் எதிர்பார்ப்போடு
இருக்கிறாள் இதயத்தில் காதலோடு

கதறியழவும் முடியாமல் வார்த்தைகளில்
உரைத்திடவும் முடியாமல் அவளுள்ளே
அடக்கி பெருமூச்சுக்களை
வலிகளுக்கு மருந்தாக்கி
ஏதோ ஓர் எதிர்பார்ப்பில் பயணிக்கிறாள்

வேண்டாம் என அவள்
ஒதுங்கிய போதே நீ
தடுத்திரா விட்டால் இன்று அவளும்
ஓர் சுதந்திரப்பறவையாய்
மனச்சுமைகள் நீங்கி
நிம்மதியாய் வாழ்ந்து கொண்டிருப்பாள்

இது எங்கோ இருக்கும் உனக்கு
கேட்காமலிருக்கலாம் ஆனால்
ஏக்கப் பெருமூச்சுக்கள் வழிவிடுமா?
எண்ணப் பேரலைகள் கரை தொடுமா?

கலேவெல **லரீபா பதுர்தீன்**

# இன்செக்ட் பைட்ஸ்(Insect Bites) எனப்படும் பூச்சிகளின் கடியால் ஏற்படும் தாக்கங்களும் நிவாரணங்களும்

கோடை காலம் வந்துவிட்டது. மக்கள் இனி வீட்டில் இருக்கும் நேரத்தை விட வெளியில் அதிகமாக சுற்றித் திரிவதைக் காணலாம்.நல்ல காற்றும் மற்றும் குறைவான வெப்பம் இருக்கும் சூழல்களான கடற்கரை, பூங்கா,மொட்டை மாடி, தோட்டம் போன்ற இடங்களில் பொதுவாக மக்கள் அதிகமாக நடமாடுவதைக் காணலாம். இப்படியான இடங்களில் உலவும் போது, தேனீ மற்றும் குளவி களைக் காணமுடியும். இந்தக் காலங்களில் பூச்சிகள் சுறுசுறுப்பாக இயங்குவதால் நம்மை அவை சில நேரங்களில் கடிக்கும் வாய்ப்பு உண்டு. தேனீ அல்லது குளவிக்கடி என்பது ஒரு வலி மிகுந்த அனுபவம். பொதுவாக தேனீ மற்றும் குளவிகள் தமது கொடுக்கை, தம்மைத் தற்காத்துக் கொள்ளும் பாதுகாப்புக்கருவியாகக் கொண்டு செயற்படுகின்றன. இவ் வாறான பூச்சிகள் மனிதனைக் கடிப்பதால் அல்லது கொட்டுவதால் மனித உடலில் பலவித



அறிகுறிகள் தென்படுகின்றன. கொடுக்கின் மூலம் இவை நம்மைக் கொட்டுவதால் நமது உடலில் பல எதிர்வினைத் தாக்கங்கள் (Allergic reactions) உண்டாகின்றன. தற்காலிக வலி அல்லது அசௌகரியம் முதல் சில வகை தீவிர ஒவ்வாமை வினைகள் வரை இவற்றால் உண்டாகின்றது

பெரும்பாலானவர்களுக்கு, குளவி கொட்டுவது ஆபத்தாக அமைவதில்லை. அதன் அனைத்து விளைவுகளும் சில நாட்களுக்குப் பிறகு மறைந்துவிடும். இருப்பினும், ஒவ்வாமை நிலை உடலில் கொண்டவர்கள் மற்றும் சிறு குழந்தைகள், பலவீனமான மற்றும் வயதான மக்கள்; கர்ப்பிணி பெண்கள்; நீரிழிவு நோய், ஆஸ்துமா நோயாளிகளுக்கு பூச்சிகளின் கடியால் மிகவும் கடுமையான சிக்கல்கள், மரணம் கூட சம்பவிக்கும் நிலை ஏற்பட்டு விடுகிறது. எனவே, ஒவ்வொரு நபரும் இதன் விளைவுகள், நிவாரணம் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்.

பூச்சிகளின் கடியால் உடலில் ஏற்படும் தாக்கங்கள்...

கடித்த நேரத்தில், குளவி அதிக அளவு ஹிஸ்டமைன் எனும் ஒரு வகை வேதிப் பொருளை செலுத்துகிறது, இது உடலில் ஒரு வகை எதிர்வினைத் தாக்கத்தை



ஏற்படுத்தும். இது கடுமையான உடல்நலப் பிரச்சினைகளைத் தூண்டி விடும். உடற்கலங்களின் வீக்கம் முதல் மூச்சுக்குழாய் அழற்சி, அனாபிலாக்டிக் அதிர்ச்சி (Anaphylactic shock) மற்றும் இறப்பும் நிகழ வாய்ப்புகள் அதிகம். எனவே, ஆபத்தில் உள்ளவர்கள் குளவி இல்லாத வாழ்விடங்களில் இருக்க முயற்சிக்க வேண்டும். மேலும் கடித்தால், நீங்கள் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும். ஒரு நபரை மூன்றுக்கும் மேற்பட்ட பூச்சிகள் கடித்திருந்தால், அவசரமாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டியது அவசியமாகும்

அறிகுறிகள்...

குளவி அல்லது தேனீ கொட்டியவுடன் அந்த இடத்தில் உடனடியாக ஒரு வித எரிச்சலுடன் கூடிய வலி, கொட்டிய இடத்தின் மத்தியில் வெள்ளை நிறத்திட்டு, அதனைச் சுற்றி சிவந்த நிறம்



உண்டாவது, மற்றும் அந்த இடம் வீக்கம் அடைவது போன்ற சிறிய அறிகுறிகள் தோன்றும். இத்தகைய சிறிய லேசான அறிகுறிகள் அடுத்த இரண்டு நாட்களில் மறைந்துவிடும்.

அடுத்த நிலையில் மிதமான பாதிப்பு கொண்டவர்களுக்கு ஐந்து முதல் பத்து நாட்களுக்குள் சீராகி விடும்.

குளவிக்கடிக்கான ஒவ்வாமை உலக மக்கள் தொகையில் சுமார் 2% பேருக்கு உள்ளது.

ஒரு நபர் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டிருந்தால் அல்லது ஒரே நேரத்தில் பல பூச்சிகளால் கடிக்கப்பட்டால், உடலில் பின்வரும் அறிகுறிகள் தோன்றக்கூடும்:

வெப்பநிலை அதிகரிப்பு;
தலைவலி;
மயக்கம்;
தலைசுற்றல்;
நெஞ்சுவலி;
இருதயத்தில் துடிப்பு வீதத்தில் அதிகரிப்பு;
மூச்சுத்திணறல்;
வயிற்று வலி;
வலிப்பு;
குமட்டல் மற்றும் வாந்தி;
தோலில் இரத்தக்கசிவுகள் (கொப்புளங்கள்).

கடுமையான சந்தர்ப்பங்களில், அனாபிலாக்டிக் அதிர்ச்சி (அதிதீவிர ஒவ்வாமைத் தாக்கம் - Anaphylactic sock) உருவாகலாம், ஒரு குறுகிய நேரத்திற்குள் தாக்கப்பட்ட நபரின் சுவாசம் தடைப்படும் ஆபத்து ஏற்படும். சுயநினைவை இழந்து அவரது இரத்த அழுத்தம் வேகமாகக் குறைந்து மற்றும் அவரது இதயத்தின் செயல்பாடும் தடைப்படுகிறது.

குளவிக்கடிக்கு இவ்வாறான நிலை ஒரு கடியிலிருந்து கூட உருவாகலாம், இருப்பினும் ஆரோக்கியமான மக்களுக்கு சுமார் 500 குளவிக்கடிகளால் மரணம் ஏற்படுவதாக மருத்துவ அறிக்கை கள் குறிப்பிடுகின்றன.

தேனீ அல்லது குளவி போன்ற வற்றிற்கு ஒவ்வாமை கொண்ட வர்களுக்கு மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட தேனீக்கள் அல்லது குளவிகள் கொட்டியவர்களுக்கு இந்த நிலை

சற்றுத் தீவிரமடைய வாய்ப்பு அதிகமாகும். இந்த நிலையில் மருத்துவ சிகிச்சை உடனடியாக எடுத்துக் கொள்வது நல்லது.

பூச்சிகள் குத்தும் உடற்பாகங்களும் மிகவும் முக்கியமானது. கைகள், கால்கள், விரல்கள், உள்ளங்கைகள் மற்றும் கால்களுக்கு ஒப்பீட்டளவில் ஒவ்வாமை தாக்கங்கள் வருவது குறைவு. உதடுகள், காதுகள், கண்கள், புருவங்கள், கன்னங்கள், நெற்றி, தலை: இரத்த நாளங்கள் தோலுக்கு அருகில் வரும் இடங்களில் ஒரு குளவி கொட்டினால் அது மிகவும் அதிகரித்த ஒவ்வாமை தாக்கத்தை ஏற்படுத்த வல்லது. நாக்கு மற்றும் கழுத்தில் கடித்தல் மிக மிக ஆபத்தானதாகக் கருதப்படுகிறது: இந்த இடங்களில் உருவாகும் வீக்கம் ஒட்சிசனின் வழங்குதலைத் தடுத்து விடுவதால் மருத்துவ உதவியை நாடினாலன்றி உயிர் பிழைப்பது கஷ்டம். இவ்வேளையில் மூச்சுத் திணறலே இறப்புக்கு காரணமாக அமைந்து விடுகிறது.

ஒரு குளவி ஒரு குழந்தையைக் குத்தினாலோ வயது வந்தவருக்குக் குத்தினாலோ பொதுவான மருத்துவமே எல்லோருக்கும் வழங்கப் படுகிறது. குளவிக்கடியின் எண்ணிக்கையும் ஒவ்வாமை தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகிறது. கடி ஒற்றை என்றால், குழந்தைக்கோ, ஆரோக்கியமான வயது வந்தவர் களுக்கோ ஒவ்வாமை வர வாய்ப்புகள் இல்லை, நீங்கள் மருத்துவ மனைக்கு செல்ல வேண்டிய அவசியமும் வராது, ஆனால் நீங்கள் மிகவும் அவதானமாக அவரது நிலையைக் கண் காணிக்க வேண்டும். அவ்வாறு அவதானிக்கையில் சுவாசப் பிரச்சினைகளின் அறிகுறிகள் தென் பட்டால், நீங்கள் உடனடியாக ஒரு மருத்துவரை அணுக வேண்டும்.

நிவாரணம்...

லேசான அல்லது மிதமான பாதிப்பு கொண்டவர்களுக்கு வலி, வீக்கம், அரிப்பு மற்றும் சிவப்பு நிறம் ஆகியவை குறைவதற்கு சில எளிய சிகிச்சை முறைகள் வீட்டிலேயே செய்து கொள்ளலாம்.

*1.*கொடுக்கை நீக்குதல் தேனீ அல்லது குளவிக் கொடுக்கால் உங்கள் உடலில் கொட்டியவுடன், முதல் வேலையாக அந்தக் கொடுக்கை உங்கள் உடலில் இருந்து





நீக்கி விடுங்கள். இல்லையேல் அடுத்த சில நொடிகளில் ஒவ்வா மைத்தாக்கம் உடலில் பரவ நேரிடும்.

2.கொட்டிய இடத்தில் கிருமி நாசினி சோப் மற்றும் தண்ணீர் பயன்படுத்தி நன்றாகக் கழுவவும்.

3.நன்றாக துடைத்துவிட்டு, சிறிது அன்டிசெப்டிக் மருந்து தடவலாம். அரிப்பு மற்றும் வீக்கம் குறைய கலமைன் லோஷன் தடவலாம். குறிப்பு கொடுக்கை கிள்ளி வெளியில் எடுப்பதைத் தவிர்க்கவும்.

இல்லையென்றால் அதிக நஞ்சு சருமதிற்குள் ஊடுருவும் அபாயம் உள்ளது.

4.அடுத்தநிலையாக, அந்தஇடத்தில் ஐஸ் ஒத்தடம் கொடுக்கலாம். இதனால் மற்ற பல்வேறு அறிகுறிகளிலிருந்து உடனடி நிவாரணம் கிடைக்கும். குளிர் வெப்பநிலை, கடிபட்ட இடத்தில் ஒவ்வாமைக் கூறுகள் பரவுவதைத் தாமதப்படுத்தும். மேலும் ஐஸ் ஒத்தடம் தருவதால் வலி மற்றும் வீக்கம் குறையும். வினிகரும் பயன்படுத்தலாம்.

ஒவ்வாமைக்கு ஆளானால், பாதிக்கப்பட்டவருக்கு ஆண்டிஹிஸ்டமைன் (chlopheni-

ramine எடுத்துக் கொள்வது சிறந்தது. ஆண்டிஹிஸ்டமின்களை விரைவாக உட்கொள்வதால் ஒவ்வாமை எதிர்வினையைத் தடுக்கலாம். உடலில் பூசுகின்ற களிம்பு தயாரிப்புகளும் உபயோகத் தில் உண்டு (calamine lotion).

குளவி கொட்டினால் ஏற்படும் வலி நீங்கவில்லை என்றால், நீங்கள் பரசிட்டமோல் போன்ற சாதாரண வலி நிவாரணி மருந்தை எடுத்துக் கொள்ளலாம். மேலும் கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் பெண்கள் எந்த மருந்தகத் தயாரிப்புகளையும் பயன்படுத்துவதற்கு முன்பு ஒரு மருத்துவரிடம் ஆலோசனை செய்வது நல்லது.

பிரெட்னிசெலோன் மற்றும் டெக்சாமெதஸோன் போன்ற ஒவ்வாமையை குறைக்கக்கூடிய மாத்திரைகளும் குறுகிய கால தவணைக்குள் மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படுகின்றன.

எந்த மருந்துகளையும் பயன் படுத்துவதற்கு முன்பு, நீங்கள் ஒரு மருத்துவரை அணுகுவதே சாலச் சிறந்தது. பின்வரும் சந்தர்ப்பங்களில் கடிக்கு சுய சிகிச்சை தடைசெய்யப்பட்டுள்ளது:

பல்வேறுபட்ட ஒவ்வாமைத் தாக்கம் உள்ளவர்கள் ஒரு வயது வந்தவர் 3 குளவிக்கடிகளுக்கும் அதிகமாகவும், ஒரு குழந்தை ஒரு குளவிக்கடிக்கும் உள்ளாகுதல்.

பாதிக்கப்பட்டவர் கர்ப்பிணி அல்லது பாலூட்டும் பெண்ணாக இருந்தால்;

கழுத்து, நாக்கு அல்லது கண் களில் குளவி கடித்திருந்தால்;

ஒவ்வாமைக் குறைகள் தோன்ற ஆரம்பித்தவுடன்

இதயம் அல்லது சுவாச உறுப்பு களின் நோய்களால் பாதிக்கப் பட்டவர்களுக்கு குளவி குத்தினால்.

இந்த எல்லா நிகழ்வுகளிலும், ஆம்புலன்ஸ் அழைப்பது அல்லது பாதிக்கப்பட்டவரை தனியார் வாகனங்கள் மூலம் மருத்துவ மனைக்கு அவசரமாக அழைத்துச் சென்று சிகிச்சை வழங்குவது அவசியம்.

வைத்திய சாலையில் அதி தீவிர ஒவ்வாமை தாக்கத்திற்கு சிறப்பான மருத்துவம் அளிக்கப் பட்டு நோயாளிகள் காப்பாற்றப் படுகின்றனர்

சுவாசம் இருதயத்துடிப்பு குருதிச் சுற்றோட்டம் போன்ற எல்லா வகை யானஉடல்சார்ந்தமுக்கியவிடயங்கள் மிகவும் நுண்ணிய முறையில் அவதானிக்கப்பட்டு அதற்குரிய

அதிதீவிர மருத்துவங்களும் வழங்கப் படுகின்றன. முக்கியமாக ஆக்ஸிஜன் சுவாசத்திற்காக வழங்குதல், ஊசி மருந்துகள் (அட்ரினலின், ஹைட்ரோ கோட்டிசோன், குளோபெனிரமைன்) போன்றவை வழங்கப்படுகின்றன.

பூச்சிக்கடியிலிருந்து சமூகம் பாது காப்பை பெற வேண்டு மென்றால் அவ்வாறான குளவி கூடுகள், தேன் கூடுகள் உள்ள இடத்தைக் கண்டுபிடித்து அவற்றை அகற்றுவதற்குரிய நடவடிக்கை எடுப்பது சிறந்ததாகும். அவ்வாறான இடங்களில் நடமாட்டத்தையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். பூச்சிகளின்கடி பற்றிஅவதானமாகவும் விழிப்புடனும் நடந்து கொள்ளுதல் அவசியமாக இருக்கிறது.

எனவே மிகவும் பாரதூரமான விளைவுகளைத் தரக்கூடிய பூச்சிக்கடிகளில் இருந்து தவிர்ந்து கொள்வதற்கும் அதிலிருந்து நிவாரணம் பெறுவதற்கும் சில ஆலோசனைகளை மேற்கண்ட கட்டுரையிலிருந்து வாசகர்கள் பெற்றுக் கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறேன். நன்றி.

Dr ஜலீலா முஸம்மில்
ஆதார வைத்தியசாலை
ஏறாவூர்





## பிழைத்தலில் முளைத்தெழு

வித'வை' என்பதனாலோ
வித விதமாக வைகின்றது
இந்த வையகம் அவளை

நிகழ்காலம் தொலைத்தவளின்
எதிர்காலத்தையும் ஏப்பமிட
முனைகின்றன
இந்த ஊர்வாய் முதலைகள்

சிறகிழந்தவளின் சிந்தனையையும்
சிறைப்பிடித்தது குறைமதி மானிடம்
வர்ணமிழந்த வானவில்லை
துர்ச் சகுனமென்றது சமூகம்

அவளது மீண்டெழல் மீது
நம்பிக்கையில்லாப் பிரேரணை
முன் வைக்கப்படுகின்றது

எரிதழலுக்குள் தினம் வெந்து
புரிதலுக்குள் பிழையாகிப் போனது
பெண்மை

மக்கொனையூராள்

# சமத்துவம் பொங்கட்டும்

கடற்கரையில் நாங்கள்
அமர்ந்திருந்த இடத்தை தீட்டென்று
அலைகள் கழுவியதில்லை

பிரம்மனுடைய பணியாட்களால்
நாங்கள் படைக்கப்படவுமில்லை
இறைவனால் தடைசெய்யப்பட்ட
கருவறையில் நாங்கள் பிறக்கவுமில்லை

நாங்கள் சாத்தானின்
தலைமுறைகள் அல்ல.
நாங்கள் உரிமையிழந்த விதவைகள்
மானுட செவிகளே. எங்கள்
காலடிகள் பதிந்த பாதையில் இறைவன்
உலா வர மறுத்ததில்லை

நாங்கள் தீண்டிய பாத்திரங்கள்
எங்களை எதிர்த்து உண்ணாவிரதப்
போராட்டம் நடத்தியதில்லை

எங்களைத் தீண்டினால்
தீட்டென்று நிழலுக்கு மரங்கள்
கற்றுக்கொடுத்ததில்லை

அறிஞர்களே!
நாங்கள் ராமனுடைய பாதம்
புகழ்ப்பெறுவதற்காக கற்களாய்
சபிக்கப்பட்டோம்
கருவறையில் சாதிகளால்
கற்பழிக்கப்பட்டு தீண்டாமையை
பெற்றெடுத்தோம்

எங்கள் சதைகளை தின்ற சாதிகளே
இனியேனும் எங்கள் தலைமுறைகளை
உண்ணாதிருங்கள்!

மதம் கொண்ட மானுடமே!
மதங் கொண்டு மனிதத்தை
தாக்காதிருங்கள்!!

மானிடப் பெருங்கடலில்
கருணை வெள்ளம் பொங்கட்டும்!

புவிஈர்ப்பு விசையில்
மனித மனங்கள் இணையட்டும்!

யாதும் உயிரென்னும்
சமத்துவம் பொங்கட்டும்!

**சி.விநாயக மூர்த்தி**

# எளிது

**பழி வாங்குவது
பாடம் புகட்டுவது
மறப்பது
மன்னிப்பது**

**புறக்கணிப்பது
எல்லாவற்றை விடவும்
எளிதாக இருக்கிறது
கடந்து போதல்.**

**தடமில்லாமல்
தண்டவாளத்தை
தாண்டிச் செல்லும்
தவிட்டுக் குருவியைப்
போல...**

**அ.ஈடித் ரேனா
புதுக்கோட்டை-6**

# மண் பொன்னாகும்

## புல்லாங்குழலன்

திருச்சி விமான நிலையம் பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தது.

துபாயிலிருந்து வந்த விமானம் சற்றுமுன்தான்விமானநிலையத்தில் வந்து நின்றது. வருபவர்களை வரவேற்கும் வெளிப்பகுதியில் மக்கள் திரண்டிருந்தனர்.

‘சந்திரன் நீங்கள் எங்கே இங்கே? ‘என்றார் சரவணன்.

‘எனது மகன் இந்த விமானத்தில் வந்திருக்கிறான். நீங்கள்?‘

‘எனது மகனும் இதில் தான் வந்திருக்கிறான். அபுதாபியிலிருந்து.

இப்போதைய பிள்ளைகள் எல்லாம் வெளிநாடுகளில் பணி புரியச் செல்கிறார்கள். பெற்றோர் பழையபடி தனித்திருக்கின்றனர்.‘

‘ஆமாம். நீங்கள் சொல்வது சரி தான். ஆனால் எனது மகன் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இனி அங்கு போவதில்லை என்ற முடிவை என்னிடம் சொல்லியிருக்கிறான்.‘

‘தமிழ்நாட்டில் வேலை செய்யலாமென்றா?‘

‘தெரியவில்லை. அவன் இங்கு வந்த பிறகு தான் தெரியும். நானும் கேட்கவில்லை. இந்தக் காலப் பிள்ளைகளுக்கு நம்மைவிடப் பாதுகாப்புணர்வு உண்டே.‘

பயணிகள் வெளியே வருவது தொடங்கியது இருவருடைய மகன்களும் வந்ததும் தந்தையர் இருவரும் தன் மகன்களை அடுத்தவர்க்கு அறிமுகம் செய்தனர். அறிமுகங்கள் முடிந்ததும் அவரவர் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்ல வெளியே சென்றனர்.

வாடகைக் காரில் செல்லும் போது சரவணன் தன் மகன் இளமாறனிடம் நலம் விசாரித்தார். பொதுவான பேச்சுகள் பேசிக் கொண்டே வந்தனர். குழுமணி கிராமம் வந்ததும் அவர்கள் வீட்டில் கார் நின்றது. வீட்டு வாசலில் சரவணனின் மனைவியும், பி.ஈ படிக்கும் மகள் சங்கரியும் நின்றிருந்தனர்.

நீண்ட நாட்களுக்குப் பிறகு மகனைப் பார்த்ததில் தாய் லட்சுமிக்கு கண்ணில் நீர் தளும்பியது.

காலை உணவு முடிந்ததும் தாய் இளமாறனை விளித்து 'இளமாறா, விடுமுறை முடிந்து நீ எப்போது அபுதாபி திரும்ப வேண்டியிருக்கும்? நமது குல தெய்வக் கோயிலுக்கு இந்த முறையாவது போகவேண்டுமே.' என்றாள்.

'அம்மா கவலை கொள்ளாதீர்கள், நான் இனி இங்கேயே உங்களோடு தான் இருக்கப் போகிறேன்'.

மூவரும் திடுக்கிட்ட பார்வையில் அவனை ஏறிட்டனர். 'வேலையை ராஜினாமா செய்து விட்டுத்தான் இந்த முறை வந்திருக்கிறேன்.'

'இங்கே சென்னையில் வேலை பார்க்கலாமென்றா அண்ணா' என்றாள் சங்கரி.

'இல்லை, இனி உங்களோடு இந்த வீட்டில் தானிருப்பேன். கவலைப்படாதீர்கள். சம்பாத்தியத்திற்கு வழி செய்து விடுவேன்'.

'எப்படியப்பா' என்றார் சரவணன்.

'விவசாயத்தில் இறங்கலாமென்று முடிவு செய்து விட்டேன்.'

'அண்ணா, விவசாயிகளுக்கு இங்கே வாழ்வாதாரமே இல்லை என்ற நிலையிலா?'

'ஆமாம் இளமாறா அவள் சொல்வது சரிதானே' என்று கோரஸ் பாடினார்கள் தாயும் தந்தையும்.

'அப்பா நீங்கள் விவசாயி தானே? நீங்களுமா இப்படிக் கேட்கிறீர்கள்'

'நமக்கு சொந்தமாக இருந்த 10 ஏக்கர் நிலம் இப்போது 4 ஏக்கராக மாறியிருக்கிறதே இளமாறா, உங்கள் இருவரையும் படிக்க வைக்கவே எவ்வளவு கஷ்டப் பட்டேன் என்பதெல்லாம் உங்களுக்கும் தெரியும்தானே'.

'நீங்கள் விற்ற 6 ஏக்கர் நிலத்தை நாம் மீண்டும் வாங்கமுடியுமா?'

'இரண்டு நாட்களுக்கு முன்பு தான் அதை விற்கப் போகிறார்கள் எனக் கேள்விப்பட்டேன். நமது கையை விட்டுப் போனதைப் பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும். நீ தான் சம்பாதிக்கிறாயே என நினைத்தேன்.'

'அப்பா அந்த 6 ஏக்கர் நிலத்தை நாளைக்கே விலை பேசி வாங்குங்கள். நான் கொஞ்சம் பணம் கொண்டு வந்திருக்கிறேன்.'

'தம்பி இதெல்லாம் கதைக்காக

தப்பா. விவசாயம் செழிப்பில்லை யப்பா.'

'துபாயும் அபுதாபியும் பாலை வனங்கள் நிறைந்தது தானே. அங்கேயே விவசாயம் சில இடங்களில் செழித்திருக்கிறது.

மிளகாய், குடமிளகாய், கத்தி ரிக்காய் இன்னும் பல காய்கள் இயற்கை விவசாயத்தில் விளை விக்கப் படுகிறது. நமது நாட்டிலும் ஆர்கானிக் காய்களுக்கு கிராக்கி இருக்கிறதே'.

'சரி எனக்கு புதுமுறைகள் பற்றியெல்லாம் தெரியாதே.' என்று அப்பா சொல்ல, இளமாற னோ 'அப்பா நான் அங்கிருந்த போது அந்த இயற்கை விவசாய நடைமுறைகளில் பயிற்சி பெற்றி ருக்கிறேன். அது மட்டுமல்ல அங்கே ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றையும் தெரிந்து வைத்துள்ளேன். 8 ஏக்கரில் காய்கறிகள் விளைவிப்போம். 2 ஏக்கரில் ஆடுகள் கோழிகள் வளர்ப்போம்.' என்றான்.

'அண்ணா, எம்.டெக் படித்து விட்டு ஆடு மேய்க்கவா போகிறாய்?' தங்கை சங்கரி கேட்டாள்.

'நமது நாட்டை நாம் முன்னேற் றாமல் வேறு யார் முன்னேற்று வதாம்? எந்தத் தொழிலும் இழி வில்லையம்மா.'

'ஏங்க அவன் சொல்வதும் எனக்கு சரியாகத்தான் படுகிறது. அவன் முயற்சி செய்யட்டுமே! சரியாக வரவில்லை என்றால் பிறகு பார்த்துக் கொள்ளலாமே!' என்றாள் லட்சுமி.

'ஆமாம் அப்பா, அண்ணன் சொல்வது போலவே செய்யட்டும். முடிந்தால் நாமும் உதவுவோம்.'

சரவணனின் நினைவுகள் பின் னோக்கிச் சென்றன. 10 வருடங்களுக்கு முன்பு சரவணனும் விவசாயியாக தன் விளை நிலங்களில் உழைத்து பொருள் ஈட்டிக் கொண்டி ருந்தார். பிள்ளைகளின் படிப்புச் செலவினங் களுக்காக தடுமாறிக் கொண்டி ருந்தார். கடன் வாங்கலாமா என முயற்சி செய்ய முயன்றார். அப்போது அவருடைய மனைவியும், மகனும் மகளும் அப்பா கடன் வேண்டாம். நம் நிலத்தில் கொஞ்சம் விற்கலாமே என்றனர். 'நான் இன்னும் மூன்று ஆண்டுகளில் படிப்பை முடித்துவிடுவேன். எனக்கு வேலை கிடைக்கும். பிறகு எதற்கு நமக்கு நிலங்கள். நான் உங்களுக்கு நகரத்தில் வீடு கட்டித் தருகிறேன். ஓய்வாய் இருங்கள் அப்பா' என்றான் இளமாறன்.

அப்போது நிலங்கள் வேண்டா மென்றவன் இன்று கொடுத்த நிலங்களை வாங்கலாமென்கிறான்.

அனுபவச் சிந்தனைகள் அறிவை மாற்றியிருக்கிறது. சரிதான். நாமும் நம் பழைய நிலங்களை இன்றே விலை பேசுவோம்.

'அப்பா என்ன நீங்கள் ஒன்றும் சொல்லாமல் சிந்தனையில் ஆழ்ந்து விட்டீர்கள். என் மீது நம்பிக்கையில்லையா?'

'இல்லையப்பா, நான் இன்றே அந்த மனிதரிடம் நம் நிலங்களை வாங்கப் பேசுகிறேன். சரி தானே.'

'சரியப்பா.'

வந்ததும் வராததுமாக மதிய உணவு முடிந்தவுடன் சற்று நேர ஓய்வுக்குப் பின் 1 ஏக்கர் நிலம் செடி கொடிகளோடு வீணாய் இருந்ததை அப்பாவிடம் வேலை செய்யும் பணியாட்களை அழைத்துக் கொண்டு போய் கொத்தி அடி மண்ணை மேலே வருமாறு சரி செய்தான்.

விதைப் பண்ணைக்குப் போய் காய்கறிகள் மற்றும் தக்காளி விதைகளை வாங்கி வந்தான். இருட்டும் வரை அவற்றை முறையாக அங்கே ஊன்றி தண்ணீர் விட்டுவிட்டு வீட்டுக்குத் திரும்பினான்.

'அண்ணா, நீ போகும் வேகம் ஜெட் வேகமாயிருக்கிறதே.'

'இல்லையம்மா, எதையும் தள்ளிப் போடக்கூடாது. இந்தப் பயிர்கள் குறுகிய காலப் பயிர்கள். மிகத் தேவையானதும்கூட.'

'முழு விவசாயியாகவே மாறி விட்டாயே'.

'உணவு படைக்கும் ஆற்றல் பெற்ற நாம் ஏன் வீணாயிருக்க வேண்டும். முயற்சிப்போம்.'

அடுத்த நாள் காலையில் 'அண்ணா, கத்திரி, வெண்டை மிளகாய் விதைகளை வாங்கிய நீங்கள் தக்காளி விதைகளை நிறைய வாங்கியிருக்கிறீர்களே!'

'குழம்புக்கு தக்காளி மிக அவசியம் என்ற நிலையிலிருப்பதால் அதை விற்பனை செய்வது எளிதாய் இருக்கும். அது மட்டுமின்றி சாஸ் தயாரிக்கவும் யோசனை இருக்கிறது.'

'என்ன சங்கரி அண்ணனும் தங்கையும் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்' என வந்தார் சரவணன்.

'அண்ணன் விவசாயம் மட்டுமல்ல அதனுடன் சார்ந்த மற்ற தொழில்களிலும் பிரவேசிக்கலாம் என்ற பலப்பல திட்டங்கள் வைத்திருக்கிறார்.'

‘நீங்கள் விவசாயத்தைப்பற்றி அதிகமாகக் கனவு காண்கி றீர்கள். நெல் போடுவது பற்றி நீங்கள் பேசவில்லை. காய்கறிகள் விளை விப்பது பற்றித் தான் பேசுகிறீர்கள். என்றாலும் அதுவும்கூட கஷ்டம் தான்.‘

‘அண்ணன் அதற்கும் சில வழி முறைகள் பற்றியெல்லாம் சொன்னார் அவை சாத்தியம்தான் என எனக்கும் தோன்றுகிறதப்பா.‘

‘சரி வாருங்கள் அம்மா சாப்பிடக் கூப்பிடுகிறார்கள்.‘

காய்கறிகள் விளைச்சல் மெது வாக வளர்ந்து கொண்டிருந்தது.

எல்லாமே செயற்கை உரமின்றி இயற்கை உரம் பயன்படுத்தியே நடந்து வந்தது. இயற்கை உரத்திற் கான லேட்டஸ்ட் டெக்னாலஜியும் பழமையும் கலந்து நடைபெற்று வந்தன.

ஊரில் சரவணன் பையன் வேலையை விட்டுவிட்டு இங்கு வந்து காய்கறித் தோட்டம் போடுகிறானாம். இதெல்லாம் உருப்படுமா? என சிலர் ஏகடியம் பேசித் திரிந்தனர்.

காய்கறிகள் அறுவடை நேரத்தை நெருங்கியிருந்தன.

லட்சுமி தன் மகனை நோக்கி வேகமாய் வந்தவள், ‘இளமாறா இன்றைய பேப்பர் பார்த்தாயா? தக்காளி விலை மளமளவென ஏறி யிருக்கிறது. கிலோ 150 ரூபாயை யும் தாண்டி விற்கிறதாம்‘ என்று சொல்ல,

‘அம்மா என்ன சொல்கிறீர்கள்? விலையேற்றத்தை நாம் பயன் படுத்திக் கொள்ளலாமென்றா?‘

‘ஆமாம், விலையேற்ற நேரத்தில் நாம் தக்காளிகளை விற்றால் நல்ல தொகை கிடைக்குமே.‘

‘அம்மா, நமக்கு விற்பனைக்கு வழி வேண்டும்தான். ஆனால் அது நம்மைப் போன்ற நடுத்தர மற்றும் ஏழை மக்களின் வயிற்றில் அடிப்பதாயிருக்கக் கூடாது.‘

‘அப்படியென்றால்?‘

‘150 ரூபாய் கிலோ என்றால் நாம் கிலோ 100 ரூபாய் என்று கொடுப்போம். 100 ரூபாய் என்றால் நாம் 60 ரூபாய்க்குக் கொடுப்போம். அதில் வரும் லாபம் நமக்குப் போதுமே.‘

அப்போது அங்கு வந்த சங்கரி யும், சரவணனும் இளமாறனின் கூற்றை வெகுவாகப் பாராட்டி அப்படியே செய்யலாம் என மகிழ்ச்சியுடன் சொன்னார்கள்.

லட்சுமியும் அதை மனமாற ஒப்புக் கொண்டாள்.

அடுத்த நாள் காலையில் இளமாறன் தன் வீட்டிற்கும் நிலத் திற்கும் முன் சிறிதாக தற்காலிகக் கூரை இறக்கி தள்ளுவண்டி போன்ற ஒன்றில் தக்காளிகளையும் காய்கறிகளையும் விற்கத் தொடங்கி னான். மக்களும் விலை குறைவாய் இருப்பதால் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றனர்.

இளமாறனே இடைத்தரகரின்றி விற்பனை செய்ததால் அவனுக்கு நல்ல லாபமும் கிடைத்தது. வாங்கும் அனைவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

'அண்ணா நாம் இப்படியே விற்பனையையும் செய்ய முடியுமா?'

'நீ சொல்வது சரிதான். நாம் சில இளைஞர்களை விற்பனையாளராக நியமிப்போம். எல்லாம் காலக் கிரமத்தில் தான் செய்ய முடியும்'.

'அண்ணா எனக்கும் ஆசையா யிருக்கிறது. என்னை முதல் விற்ப னயாளராய் நியமியுங்கள்.'

அங்கு வந்த சரவணனும் லட்சுமியும் தங்கள் பிள்ளைகளு டைய ஆர்வத்தையும் விவசாயம் செய்யும் பாங்கையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்தனர்.

'இளமாறா, விவசாயம் ஒருபோதும் விவசாயிகளைக் கைவிடாது. அரசும் விவசாயிகளை ஊக்குவித்தால் நல்லதொரு தொழிலாக விவசாயம் மாறும் நாள் வெகு தூரத்திலில்லை.' என்றார் சரவணன்.

ஆமாம் என்று எல்லோரும் அதை ஆமோதித்தனர். 'அண்ணா, நெல் விளைவிப் பதும் பயன்தரும் தானே.'

'சங்கரி, நாம் இதை முதலில் முயற்சித்து முன்னேறுவோம். பிறகு படிப்படியாக நன்செய் நிலங்கள் வாங்கி நீ சொல்வது போலவே செய்யலாம்.'

'அண்ணா, எனக்குத் திருமணம் ஆன பிறகும்கூட நான் இதில் தான் முனைப்பாய் இருப்பேன். கணவனை அதற்குத் தகுந்தால் போல் தான் தேர்ந்தெடுப்பேன்.'

'என்னைவிட வேகமாகப் போகிறாயே. சரி சரி உனக்கு ஆதரவான மாப்பிள்ளையை நான் தேர்வு செய்யலாம்தானே'

'இரட்டிப்பு சந்தோஷம் அண்ணா.

இருவரும் சேர்ந்து சிரித்தனர் அவர்கள் சிரிப்போடு இயற்கை விவசாயமும் தழைக்க ஆரம்பித்தது..

ஈழத்தின் தமிழ் இலக்கிய, ஆய்வுப் பணிகளில் பெரும் பங்காற்றியவர்

# பேராசிரியர் செ. யோகராசா



ஈழத்தின் முக்கிய ஆய்வாளராகப் பார்க்கப்பட்டவர், இலக்கிய உலகிலும் ஆய்வுப் புலத்திலும் நன் மதிப்புப் பெற்றிருந்தவர். குறிப்பாக மட்டக்களப்பின் இலக்கியப் பரப்பில் பல புதையல்களைக் கண்டெடுத்து உலகறியச் செய்தவர். ஈழத்தில் பல புதிய எழுத்தாளர்கள் சிறகு விரிக்கவும்,பல்கலைக்கழகம் சார்ந்து பல இளம் விரிவுரையாளர்கள்,ஆய்வாளர்கள் தோன்றவும் ஊக்கமளித்தவர் . இனம் ,மதம் கடந்து ஆற்றல்களை மதித்த பேராசிரியர் அவர். எழுத்து,இலக்கியம்,ஆய்வு என்றே தன் வாழ்நாளெல்லாம் இயங்கியவர் . பிணியோடு வைத்தியசாலையில் இருந்த அந்திம நாட்களிலும், நோய் விசாரிக்கச் சென்றவர்களிடமும் கூட இலக்கியம் பேசியவர். அவருடைய ஆரம்ப கால எழுத்துகள் 'கருணை யோகன்' என்ற புனைபெயரில் வெளிவந்தன. கதை ,கவிதை, கட்டுரையென நிறையவே எழுதிவந்த அவர், பின்னாட்களில் ஆய்வுத்துறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

இலக்கிய உலகமும்,ஆய்வுப் புலமும் மதிக்கின்ற காத்திரமான பலநூல்களைத் தந்திருக்கின்ற ஆழ்புல ஆய்வாளர் அவர்.

1. ஈழத்து இலக்கியமும்,இதழியலும்
2. இலக்கியத் தேட்டம், ஈழத்து நவீன இலக்கியம்
3. ஈழத்து தமிழ் நாவல்
4. ஈழத்து முச்சந்தி இலக்கியம்
5. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை
6. ஈழத்து வாய்மொழிப் பாடல் மரபு
7. ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கலும்,பெண் ஆளுமைகளும்,
8. ஈழத்து நவீன கவிதை
9. இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண் பாத்திரங்கள்,
10. ஈழத்துத் தமிழியல் சார் தமிழ் ஆய்விதழ்கள்
11. ஈழத்து நவீன இலக்கியங்கள்- படைப்பாளர்கள்- தடங்கள்

(76 நூல்களுக்கு எழுதிய முன்னுரைகளின் தொகுப்பு) என்பன முக்கிய நூல்களாக அறிஞர் பெருமக்களால் எடுத்துக் காட்டப்படுவன.

பதிப்பாசிரியராகவும் தொகுப்பாசிரியராகவும் செயற்பட்டு இன்னும் சிலநூல்களைத் தந்திருக்கின்றார் அவர்.

1. மாற்று நோக்கில் சில கருத்துக்களும், நிகழ்வுகளும்

2. ஈழத்து சிறுவர் பாடல்கள் களஞ்சியம்

3. ஈழத்து சிறுவர் இலக்கிய களஞ்சியம்

4. சங்க காலம் முதல் சமகாலம் வரை, என்பனவும்,மீள்பதிவு செய்யப்பட்ட அவர் தந்த அன்பே சரித்திரம், காலங்கள் சாவதில்லை (நாவல்) என்ற நூல்களும் இலக்கிய நேசர்களால் பெரிதும் வரவேற்கப்படுபவை.

தன் வாழ்நாளின் பெரும்பகுதியை தமிழ் இலக்கிய ஆய்விற்காகவே செலவிட்டவர். தன் அணிந்துரைகளால் இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு வெளிச்சம் கொடுத்தவர் என்று அறிஞர் பெருமக்களாலும், இலக்கியப் புலமை மிக்கவர்களாலும் பாராட்டப் பட்டவர்.

தனது ஆய்வுப் பணிக்காக விருதுகள் பல வென்றவர் பேராசிரியர் செ.யோகராசா.

கலாநிதிப் பட்ட ஆய்விற்காகப் பெற்ற சு.வித்தியானந்தன் விருது,பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை நூலுக்குக் கிடைத்த இலக்கியப் பேரவை விருது,ஈழத்து நவீன கவிதை : புதிய உள்ளடக்கங்கள்,புதிய தகவல்கள், புதிய தரவுகள் நூலுக்குக் கிடைத்த அரச சாஹித்ய விருது, ஈழத்து நாவல்,

ஈழத்து இதழியலும், இலக்கியமும் என்ற நூல்களுக்குக் கிடைத்த வடமாகாண சபை விருது,கலை வாருதி விருது, தேனகக் கலைச்சுடர் விருது என்பன அவற்றுள் சில.

தகவற் களஞ்சியமாக கண்ணியம் பெற்றிருந்த ’சுறுசுறுப்பான இலக்கியத் தேனீ’ அவர்.

ஈழத்தின் கலை இலக்கிய சஞ்சிகைகளான மல்லிகை,ஞானம் என்பவை அட்டைப்படங்களில் அவரைத் தாங்கிக் கௌரவித்துள்ளன .தென் கிழக்கு, ,கிழக்கு பல்கலைக் கழகங்களில் அவர் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் எம்.அப்துல் றசாக், ‘கிழக்கிலங்கை தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சி, பார்வையும் -மதிப்பீடும் என்று ஆறு திறனாய்வாளர்கள் ( ஏனையோர் சுவாமி விபுலானந்தர், கே.எஸ்.சிவகுமாரன்,எம். ஏ.நுஃமான்,சிவசேகரம், றமீஸ் அப்துல்லாஹ்) குறித்து எழுதியுள்ள நூலில் செ.யோகராசாவின் திறனாய்வு முறைமை,கிழக்கிலங்கை திறனாய்வு வளர்ச்சியில் அவரின் வகிபாகம் என்பவை குறித்தும் ஆய்வு செய்துள்ளார்.

உயிர்ப்பு என்ற நூலில் வெளிவந்த அவரின் சிறுகதை இப்னு அசூமத்தால் சிங்கள மொழிமாற்றம் பெற்றுச் சிறப்புச் சேர்த்துள்ளது.

கிழக்கிலங்கையில் -மட்டக்களப்பில் 2016 ல் அவருக்கு வெகு விமர்சையாக எடுக்கப்பட்ட பணிநயப்பு விழாவில் வெளியிடப்பட்ட ‘கருணையோகம்‘மலர் அவரின் ஆய்வுப்பணி குறித்த

ஆவணமாகப் பார்க்கப்படுகின்றது. ஈழத்தின் பல்வேறு இலக்கிய முயற்சிகள் தொடர்பாகவும் ஆய்வு செய்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவர் சமர்ப்பித்த கட்டுரைகள் ஆய்வு மாணவர்கள் பயன்பெறும் கையேடுகளாக எடுத்தாளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணம் கரணவாய் என்னும் ஊரில் செல்லையா- இலட்சுமி தம்பதியின் மகனாக1949ல் பிறந்தவர்- செ.யோகராசா.ஆரம்பக் கல்வியை யாழ் கரணவாய் வித்தியாலயத்திலும்,உயர் கல்வியை யாழ் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றவர்.

கலைமாணி தமிழ் சிறப்பு, இளந்தத்துவமாணி,முது கலைமாணி, கல்வி டிப்ளோமா, கலாநிதிப் பட்டங்களைப் பெற்றவர் அவர்.இவை தவிர, பிரவேச பண்டிதர் பரீட்சை,சைவப்புலவர் பரீட்சை என்பவற்றிலும் தகைமை பெற்றிருந்தவர் திரு செ. யோகராசா.

அஞ்சல் அதிபராக, பாடசாலை ஆசிரியராக,கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளராக, தமிழ்த்துறைத் தலைவராக, பேராசிரியராக கடமையாற்றி ஓய்வுபெற்றவர்.

யாழ்மண்ணில் பிறந்து,மலையகத்தில் மணந்து,மட்டக்களப்பில் வாழ்ந்த பேராசிரியர் செ. யோகராசா இவ்வுலக வாழ்வை 07-12-2023ல் நிறைவு செய்துகொண்டார்.

க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, எம்.ஏ.நுஃமான் போன்றவர்களின் வரிசையில் ஆய்வுலகம் மதித்த - கனதியான ஆய்வாளராகப் பெயர் பெற்றிருந்தவர் பேராசிரியர் யோகராசா. அவரின் மறைவு ஈழத்து இலக்கிய உலகு மற்றும்,ஆய்வுலகத்தைப் பொறுத்தவரைப் பேரிழப்பாகும்.

அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்போம்.

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**

# நகைச்சுவை

கண் ஒப்பரேஷன் பண்ணிய ஒருவருக்கு டொக்டர் கண்கட்டை பிரிக்கும் நாள். டொக்டர் பிரித்து முடிந்ததும் நோயாளி வீல் என்று கத்தி “டொக்டர் எனக்கு கண் தெரியல. என்னால எதையுமே பார்க்க முடியல” என்று சொல்ல, டொக்டர் சொன்னார் “உஷ், கத்தாதீங்க! இங்க யாராலுமே எதையும் பாரக்க முடியல. ஏன்னா பவர்கட்டாகிடுச்சு”

… … …

வைத்தியசாலையில் தாதி 1 : வர வர நம்ம டொக்டரோட ஞாபக மறதிக்கு அளவில்லாம போச்சு.

தாதி 2 :அப்பிடி என்னதான் செய்தார்டீ?

தாதி 1 : ஆங்...! ஒப்பரேஷன் தியேட்டர்ல ஸ்டெதஸ்கோப்பை நோயாளி வயித்துல வச்சி தச்சிட்டு, நோயாளியோட சிறுகுடலை தூக்கி காதுல மாட்டிட்டு வெளியே வந்திட்டார்.

… … …

தெருவில் ஒருவர் நாயைக் கூட்டிக் கொண்டு நடைப்பயிற்சி செய்து கொண்டிருக்க முன்னால் வந்து கொண்டிருந்தவர் கேட்டார் “ஏம்பா குரங்கோட வாக்கிங் போறே” அதற்கு மற்றவர்“அட உனக்கு கண் தெரியலயா? இது குரங்கில்ல நாய்”

முன்னால் வந்தவர் “நா உன்னைக் கேட்கலயே! நாய் கிட்டத்தானே கேட்டேன்”

"தமிழ் முகில்" இரஜகை நிலவன்
மும்பாய்

# தண்டனை

பக்கத்து வீட்டு இளம்பெண் குறிஞ்சி இறந்து போனதாகச் செய்தி வந்த போது அடித்துக் கொண்டு ஓடினான் கணேசன்.

ஓலைக்குடிசையின் குறுக்குக் கம்பில் தூக்குப் போட்டு பிண மாகத் தொங்கினாள். அவளின் அம்மா ''ஓ'' வென்று அலறித் துடித்து அழுது கொண்டிருந்தாள்.

மரித்து விட்ட போதும் குறிஞ்சி யின் அதரங்கள் கணேசனைப் பார்த்துக் கேலியாகச் சிரிப்பது போலத் தோன்றியது.

உறவினர் ஒவ்வொருவராய் வந்துகொண்டிருக்க, பெண்கள் குறிஞ்சியின் தாயோடு சேர்ந்து ஓலமிட்டு அழ ஆரம்பித்தார்கள்.

''போலீஸுக்குத் தெரிந்தால் கண்டிப்பாக பிரச்சினை வரும். குறிஞ்சியை வெட்டிக் கூறு போட்டுத்தான் தருவாங்க. அதற்கு முன்னால் உடனே எரிச்சிடலாம்'' அழுது கொண்டிருந்த குறிஞ்சியின் அப்பா குமரேசனிடம் ஒரு பெரியவர் சொன்னார்.

''ஏற்கனவே அவர் நொந்து போயிருக்கார். அவரைப்போட்டுத் தொந்தரவு பண்ணி எதற்கு? நம்மூர் வழக்கப்படி காரியத்தை சீக்கிரமா முடிச்சிடலாம்'' என்றார் இன்னொருவர்.



"வெளி நாட்டுல இருக்கிற அவள் கணவன் வரவேண்டாமா? அவனுக்குத் தெரியப் படுத்த வேண்டாமா?" குமரேசன் கேட்க ''சும்மா இரு பெரிசு! அவன் துபாயிலிருந்து எப்போது வந்து கட்டைய எப்போது தூக்குவது?" அலுத்துக் கொண்டார் ஊர்ப் பெரியவர்.

''சும்மா பேசிக்கிட்டே இருக்காதீங்கப்பா. முதலில் பிணத்தை கீழே இறக்குங்க" என்று பஞ்சாயத்து தலைவர் சொல்ல, மற்றவர் களோடு சேர்ந்து குறிஞ்சி யின் கழுத்திலிருந்து கயிற்றை கழற்றினான் கணேசன்.



அப்போது மூலையில் கிடந்த பெட்டியின் மேல் ஒரு காகிதம் படபடத்தது. அதை வேக வேக மாக எடுத்தான். அதன்மேல் 'கணேசனுக்கு' என்று எழுதி இருந்தது.

ஒரு கணம் விக்கித்துப் போனான். மனசு டமாரம் போல் படபடவென வேகமாக அடித்துக் கொண்டது. பொங்கி வழிந்த வியர்வையை துடைத்துக் கொண்டான்.

வெளியே உறவினர்கள் துக்கத் தோடு ஈமக்கிரியைகள் செய்து கொண்டிருக்க, குறிஞ்சியின் தங்கையும் அங்கு வந்து விட அழுகை அதிகமானது.

அந்தக் காகிதம் நெஞ்சை சுட்டுக் கொண்டிருந்தது. 'இதற்கா கவா குறிஞ்சி தற்கொலை செய்து கொண்டாள். உன் சாவிற்கு நானே காரணமாக இருந்து விட்டேனா?' என்று எண்ணிய கணேசனுக்குத் தலையைச் சுற்ற ஆரம்பித்தது.

மெதுவாக வெளியே வந்து பக்கத்து வீட்டில் கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடித்தான்.

'முழுமையாய் என்ன எழுதி யிருப்பாள் குறிஞ்சி?' யோசித்த வன் அருகிலிருந்த குடிசையின் மறைவில் நின்று படித்தான்.

"கணேசா... உன்னை என் சகோதரனாக நினைத்துதான் நீ கல்லூரியில் அடித்த லூட்டிகளையும் கதைகளையும் சொல்லும் போது வெகுவாக ரசிக்க ஆரம்பித்தேன்.

ஆனால் நீ என்னை வேறு பார்வையில் பார்த்திருக்கிறாய் என் பதை நேற்றுத்தான் உணர்ந்தேன்.

வெளிநாடு போயிருக்கும் என் கணவர் நிறைய சம்பாதித்து முடிந்து ஊர் வரும்போது மாடி வீடு கட்ட வேண்டும், நிறைய தோப்புகளும் வயல்களும் வாங்க வேண்டும். ஒரு பெரிய பால் பண்ணை வைக்க வேண்டும் என்ற கற்பனைகளோடு அவருடைய வருகைக்குக் காத்திருந்தேன்,

உடம்பும் மனதும் ஒத்துப் போகாத சலனங்கள் ஏற்படுவது சாதாரணம் தான். எப்போது உன் பார்வைகள் என் உடம்பில் படுகிறது என்று உணர்ந்தேனோ நான் உன்னை என் கணவரோடு ஒப்பிட்டுப் பார்க்கத் தோன்றி விட்டது. பாழாய்ப்போன இந்த இளனமயும் தனிமையும் என்னை சலனப்படுத்தி விட்டது.

எப்போதுஇன்னொருவனோடு என்னை இணைத்துப் பார்க்க மனது சம்மதித்து விட்டதோ அப்போதே தாலிகட்டிய கணவனுக்குத் துரோகம் செய்து விட்டதாக நினைத்தேன்.

இந்தத் தவறுக்கு முழுக்க உன்னைக் குறை சொல்ல முடியாத போதும் இனி என் கணவனுக்கு நான் துரோகம் செய்ய விரும்ப வில்லை என்ற காரணத்தால்தான் இந்த உலகை விட்டுப் போகிறேன்.

இருந்தாலும் கணேசா உனக்கும் தண்டனை உண்டு. என்னைச் சலனப் படுத்தியதற்கு உனக்குத் தண்டனைத் தர வேண்டாமா?

என் தற்கொலைக்கு காரணம் நீதான் என எழுதி வைத்து விட்டு நான் இறந்திருந்தால் ஊராரால் நாம் இருவரும் கொச்சைப் படுத்திதான் பேசப் படுவோம்.

அதனால், நீ எதைப் படித்தாலும், கடிதம் வாசித்தாலும் குறிஞ்சியின் மரணத்துக்குக் காரணமானவன் நான்தான் என்று உன் மனசாட்சி உன்னை வாட்ட வேண்டும், வதைக்க வேண்டும். இதை விட பெரிய தண்டனை தரமுடியாது. இனி நீ எந்தப் பெண்ணையும் ஏறெடுத்துப் பார்க்காதே ! ”

- குறிஞ்சி

படிக்கப் படிக்க கணேசனுக்கு பதற்றம், பயம் வாட்டியது. தன் தவறுக்கு பிராயசித்தம் கேட்டு அங்கேயே மண்டியிட்டு அழுதான்.

அங்கு நிலவிய மரண ஓலத் தோடு கணேசின் அழுகுரலும் சேர்ந்தது.

ஆனாலும் மனசாட்சி அவனை மன்னிப்பதாக இல்லை.



## பிள்ளைக் கனியமுதே

என் மகன்  ஈன்றெடுத்த தவப்புதல்வனே!
அழகிற்கு அழகடா  உன் சிரிப்பு
அமுதினும்  இனிமை உன் மழலை மொழி
நீயோ அழகோவியமாம்  மோனாலிஸா

கையில் தவழும் கற்கண்டே!
கவலைகள் நீக்கும் அருமருந்தே
குறும்புகளால் வியக்க வைக்கும்
எட்டாம்   அதிசயமும்   நீயடா

மௌனம்  கூட அழகு தானே
வார்த்தையில்லா  உன் மொழியில்
நறுமலர்களின் மணம் கூட
தோற்று நிற்கும் உன் நறுமணத்தில்

பஞ்சு போன்ற கன்னமதை
கொஞ்சிடத்தான் கொள்ளை ஆசை
உந்தன் முல்லைச் சிரிப்பழகில்
நெஞ்சமெல்லாம்  பஞ்சாகுது

நீ கண் சிமிட்டிடும் அழகைக்
காணக்கண்  கோடி வேண்டும்
கண்ணோரம்  நீர் கசிய
காலமெல்லாம் ரசிப்பேனடா  உன்னழகை

என் மகன் எனும் அன்பின் சிகரத்திற்கு
தந்தை எனும் உயிர் முகவரியிட்ட
அனிச்ச மலர் நீயல்லவா
அபூர்வ வைரமும் நீயல்லவா

**சித்தி மிஸ்ரியா அமீன்**
கிண்ணியா

# குறுங்கவிதைகள்

பாத்திரக் குளத்தில்
சிதறி இருக்கும்
சூரியக் காசுகளை
அளாவுகிறது சிறுகை
கூரை வேய உதவும்

...

ஓய்வில்லாமல்
துடித்துக் கொண்டிருக்கிறது இதயம்
நான் கடிகார முட்களை
உற்றுப் பார்த்துக் கொண்டு
இருக்கிறேன்

...

உதித்தலும், மறைதலுமாய்
உயிர்த்தலும், உதிர்த்தலுமாய்
இயல்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன
எல்லாமும்...
மனிதனைத் தவிர...

...

சொட்டிக் கொண்டே  இருத்தலில்
இருப்பை நிலைநிறுத்துகிறது
தண்ணீர்
தன்மையின் நிறைதலில்
பாத்திரங்கள்

அன்புச்செல்வி சுப்புராஜ்
பட்டாபிராம், சென்னை





# ரவை கிண்ணி கேக்

### தேவையான பொருட்கள்

ரவை 250 g.
சீனி. 250 g
முட்டை 5
ஏலம். 8.
சின்ன சீரகம். 1 கரண்டி
பட்டை சிறு துண்டு.
வறுத்து பொடித்த கஜு,பாதாம் 50g
எண்ணெய். கிண்ணங்களில் தடவ.

### செய்முறை

ஏலம், சீரகம், பட்டை இலேசாக வறுத்து சீனியுடன் அரைத்து அரித்து வைத்துக்கொள்ளவும். பின்னர் ஒரு பாத்திரத்தில் முட்டையை ஒவ்வொன்றாக சேர்த்து நன்கு பீட் பண்ணவும். அத்துடன் அரைத்த சீனி சேர்த்து பீட்பண்ணவும். பாத்திரத்தில் நுரைபோல் மேலே எழும்பி வரும் அந்த நேரம் றவையை கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து அடிக்கவும். பின்னர் 5 நிமிடம் அவனை சூடாக்கி விடவும் . கேக் கிண்ணிகளில் எண்ணெய் தடவி அதனுள் கலவையை முக்கால்பகுதிக்கு விட்டு வறுத்து பொடித்த கஜு, பாதாம் சேர்த்து 20 நிமிடம் பேக்பண்ணி எடுக்கவும். பின்னர் மெதுவாக கிண்ணங்களிலிருந்து கழட்டி எடுக்கவும்.

**சித்தி மிஸ்ரியா அமீன்.**
கிண்ணியா

# டிப்ஸ் டிப்ஸ்

- குழம்பில் உப்பு அதிகமானால், ஒரு அலுமேனியக் கரண்டியை நன்கு சூடாக்கி குழம்பில் அமிழ்த்தி எடுத்தால் உப்பு குறையும்.

- சூடான மாவை ப்ளாஸ்டிக் சல்லடையில் கொட்டினால் சல்லடை ஓட்டையாகி விடும். அதேபோல சூடான எண்ணெயை ப்ளாஸ்டிக் வடிப்பானால், வடி கட்டினாலும் இதே நிலமை தான். அப்படி நடந்த பிறகு அவற்றை சாப்பிடுவது உடலுக்கு கேடு விளைவிக்கும்.

- எப்போதுமே சமையலறையில் 5 லிட்டர் கேன்கள் இரண்டில் நீர் பிடித்து வைத்தால், நீர்வெட்டு சமயங்களில் உதவும்.

- சின்ன தொட்டிகளில் கீரை வகைகள், பச்சை மிளகாய், ரம்பை,லெமன் க்ராஸ் போன்றவைகளை வளர்த்தால் அவசர சமையலுக்கு உதவும்.

- எப்போதுமே பலாப்பழச்சுளைகளுக்கு உப்பு, மிளகு, சீரகத்தூள் தூவி சாப்பிட்டால் வாயுத்தொல்லையைத் தவிர்க்கலாம்

# செல்லச் சிட்டுக்கள் நூல் வெளியீடு

எழுத்தாளர் கிண்ணியா சபீனா வைத்துள்ளாவின் செல்லச் சிட்டுக்கள் நூல் வெளியீட்டு விழா கிண்ணியா நூலகக் கேட்போர் கூடத்தில் கடந்த 16/12/2023 ஆம் திகதி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாப் M S தௌபீக் அவர்களும், சிறப்பு அதிதியாக திட்டமிடல் பணிப்பாளர் (கி, மா)ஜனாப் முஸ்இல் அவர்களும் கலந்து கொண்டனர்! கிண்ணியா வலய முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர், ஜனாப் M N சமீம் அவர்கள் தலைமை தாங்கி நிகழ்வினை வழி நடத்தி சிறப்புச் செய்தார்!

நிகழ்ச்சித் தொகுப்பாளராக கிண்ணியா வலய ஆசிரிய வளவாளர் ஜனாப் சதாத் ரெலிகான் அவர்கள் நிகழ்வுக்கு வலுவூட்டினார்!

நூல் நயவுரையினை ஆசிரிய வளவாளரும் இலக்கிய ஆய்வாளருமான ஜனாப் ஜெஸ்மி மூஸா அவர்கள் நயம்பட வழங்கினார்!

இந்நூலினை லக்ஸ்டோ மீடியா வெளியிட்டு வைத்தது என்பது குறிப்பிடத் தக்கது!

நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 12 மணியளவில் சிறப்புடன் நிறைவுற்றது!

இதில் கல்விமான்கள் அறிஞர்கள் கவிஞர்கள் சமூக ஆர்வலர்கள் முன் பள்ளி ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது!





# பாவேந்தலின் 50 எழுத்து ஆளுமைகள் நூல் வெளியீடு


பாவேந்தல் பாலமுனை பாறூக் எழுதிய '50 எழுத்து ஆளுமைகள்' நூலின் அறிமுகவிழா கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் 'பேராசிரியர் செ. யோகராசா' அரங்கில் 16-12-2023ம் திகதி இடம்பெற்றது.

ஈழத்தின் மூத்த எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள் ஊடகவியலாளர்கள், கல்விமான்கள் அரசியல் வாதிகளெனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழா, பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் தலைமையில் நிகழ்ச்சித் தொகுப்பாளரும் தமிழ்முரசு பொறுப்பாசிரியருமான ஜீவா சதாசிவம் அவர்களின்வரவேற்புரையோடு ஆரம்பமானது.

தலைமை உரை நிகழ்த்திய பேராசிரியர் சபா ஜெயராசா எழுத்தாளர்களின் ஆளுமை பற்றி எழுதும் முறைமை தற்போது பலநாடுகளிலும் இடம்பெற்று வருவதாகவும் அதனை ஒரு எழுத்து வகைமையாகக் கொள்ளமுடியும் என்றும் குறிப்பிட்டதோடு, எழுத்தாளர்களை மட்டுமல்ல அவர்களை ஊக்குவிக்கும் வகையில் உதவுபவர் களையும் எழுதவேண்டும் என்று குறிப்பிட்டதோடு பாலமுனை பாறூக்கின் அவ்வகைச் செயற் பாட்டினைப் பாராட்டினார்.

நிகழ்வில்,நூல் நயவுரை நிகழ்த்திய பேராசிரியர் எம். எஸ். எம் அனஸ் இவ்வாறான ஆளுமைகள் பற்றிக் கூறும் நூல்கள் முன்னரும் வெளிவந்த போதிலும் இந்நூல் அவற்றிலிருந்து வேறுபட்டதாக இலக்கியத் தரம் மிக்கதாக அமைந்திருப்பதை, ஒரு வரலாற்று ஆவணமாக அது மிளிர்வதை எடுத்துரைத்தார். நூலின் முன்னுரை குறித்துச் சிலாகித்த அவர், நூலாசிரியரின் 50 வருட அனுபவம், ஆற்றல், எழுத்தாளர்களோடு கொண்டிருந்த நட்பு என்பன சுவைபட நூலை எழுதுவதற்கு உதவியிருப்பதாகக் குறிப்பிட்டார்.

கருத்துரை வழங்கிய ஞானம் ஆசிரியர் சாஹித்ய சூரி டாக்டர் ஞானசேகரன் நூலாசிரியரின் பல்துறை ஆற்றலையும் வியந்தார்.




வாழ்த்துரை வழங்கிய கௌரவ பா.உ ரவூப் ஹக்கீம் வாழ்ந்து மறைந்த மூத்த பல இலக்கியவாதிகள் இலக்கியம், எழுத்து என்று வாழ்ந்த போதும் அவர்களில் பலர் பதிவு செய்யப்படாமலேயே மறைந்து போனார்கள். அவர்கள் பற்றிய தகவல்களை இன்றைய இளம் படைப்பாளர்கூட அறிந்திருக்க வில்லை. இதனால் பாலமுனை பாறூக்கின் இந்தப்பணி வரவேற் கப்பட வேண்டியது என்று குறிப்பிட்டார் தென்கிழக்கின் நவீன எழுத்தாளர்கள் கவிஞர்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த அவர் அனார், உமா வரதராஜன், சோலைக்கிளி போன்றோரின் படைப்புகளையும் ஞாபகமூட்டினார்.

எதிர்கால சந்ததியினருக்கும் மாணவர் களுக்கும் ஒரு கையேடாக இந்நூல் அமைந்திருப்பதாகக் குறிப் பிட்டார். தென் கிழக்கில் வாழும் முஸ்லிம் படைப்பாளர்கள்தமிழுக்கு ஆற்றிவரும் சிறப்பான பணி குறித்து வியந்த அவர், காப்பியம் படைத்துவரும் டாக்டர் ஜின்னா ஷரிபுத்தீன் போன்று நவீன காவியங்களைத் தரும் பாலமுனை பாறூக்கும் தென்கிழக்கைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

எழுத்தாளர் உடுவை எஸ். தில்லை நடராசா,கவிஞர் வாசுகி பி. வாசு ஆகியோர் நூலின் சிறப்பு குறித்தும் நூலாசிரியரின் நூலாக்கத் திறன் குறித்தும் வியந்தனர். மூத்த முக்கிய எழுத்தாளர்களை எழுதியிருக்கும் விதம் வாசிப்பு இன்பத்தைத் தருவ தாகவும் குறிப்பிட்டனர்.

கவிமணி நஜ்முல் ஹுசைன், சந்தக் கவிமணி கிண்ணியா அமீர் அலி ஆகியோர் கவி வாழ்த்துரைத்தனர். புரவலர் ஹாஸீம் உமர் முன்னிலை வகித்து, முதற்பிரதி பெற்று விழாவினை மெருகூட்டினார். தமிழ்மணி மானா மக்கீன் உட்பட பல மூத்த எழுத்தாளர்களும் பிரமுகர்களும் சிறப்பு அதிதிகளாக கலந்து கொண்டு பிரதிகள் பெற்று விழாவினைச் சிறப்பித்தனர். பொன்னாடைகள், நினைவுச்சின்னம், சான்றிதழ்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டு நூலாசிரியர் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வில், நூலாசிரியர் தான் எழுதிய பல்வகை நூல்களின் ஒரு தொகுதியை கொழும்பு தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கி வைத்தமை குறிப்பிடத் தக்கதாகும்


"50 எழுத்து ஆளுமைகள்"
நூல் அறிமுகம்








"50 எழுத்து ஆளுமைகள்"
நூல் அறிமுகம்


metro





# பொங்குமின்பத் தைத்திங்கள் போற்று

தங்கிடும் இன்பங்கள் தப்பாது மாரியும்
மங்கலமு முண்டாம் மகத்தான செந்நெல்லே
எங்கும் செழித்திடுமா மெண்டிசையும் பொங்கலிற்
பொங்குமின்பத் தைத்திங்கள் போற்று .

போற்றுவோம் நாளுமே போய்விடுந்  துன்பமும்
மாற்றுவோந் தீவினை மங்காத பொன்னாளில்
வீற்றிருக்கும் நன்மை விடியட்டும் நல்வாழ்வு
சீற்றங்கள் வேண்டாமே சீர் .

சீரான வாழ்க்கைக்கு சிந்தைநிறை பொங்கலும்
பாராள வைத்திடும் பங்கிடுவோம் செல்வத்தை
தாராள நெஞ்சத்தால் தாபிப்போம் மானிடரே
வாராதோ நல்லெண்ணம் வந்து .

வந்திடும் பொங்கலும் வாசமுள்ள மஞ்சளுடன்
தந்திடுஞ் செம்மையைத் தப்பாது வந்தனமுஞ்
செந்தமிழிற் பார்மிசையிற் செப்பிடுவோம் நன்னாளிற்
சிந்தையில் வைத்தல் சிறப்பு .

சிறப்புமிக்க நாளில்நாம் சீர்பலவும் பெற்றே
உறவெல்லாங் கூடிட ஊர்தனில் நாமும்
மறவாது நின்று மரபினை யாத்தல்
உறவாகும் பொங்கல் உணர் !!



**சரஸ்வதி பாஸ்கரன்**

9 772719 252001